Registered as a NewsPaper பக்கங்கள் 06 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 14 (26-02-1992) புதன்கிழமை ஓசை: 08

## தமிழ்நேசன் ஆசிரியரின் தடுப்புக்காவல் சரியானது
### சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு

''தமிழ் நேசன்'' பத்திரிகை ஆசிரியர் சிவநாயகம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதை சரியானது என சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இவர் வெளிநாட்டு செலாவணி சட்டத்தை மீறி பணம் வைத்திருந்ததாகவும் புலிகளுக்கு ஆதரவாக பத்திரிகையில் எழுதியதாகவும் குற்றம் சாட்டப்பட்டு தமிழகப் பொலிசாரால் கைது செய்யப் (6ஆம் பக்கம் பார்க்க)

# பூவரசங்குளத்தில் கடும் சண்டை
# கவச வாகனம் நாசம்: படைகள் பலி

(வவுனியா)

நேற்றுக்காலை வவுனியா - பூவரசங்குளம் பகுதியிலிருந்து முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்து அப் பகுதியில் கடும் சண்டை மூண்டது. இச் சண்டையில் ஒரு கவச வாகனம் முற்றாக புலிகளால் அழிக்கப்பட்டது. பல இராணுவத்தினர் கொல்லப் பட்டனர்.

இச்சம்பவம்பற்றி தெரிய வருவதாவது: பூவரசங்குளம் பகுதியிலிருந்து கனரக வாகனங்கள் சகிதம் முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர்மீது 100 யார் தூரத்தில் வைத்து விடுதலைப்புலிகள் ஆர். பி. ஜி தாக்குதலை மேற்கொண்டனர். இதனைத் தொடர்ந்து கடும் சண்டை ஆரம்பித்தது. இத்தாக்குதலால் சிறிலங்காப்படையினரின் கனரக வாகனமொன்று முற்றாக எரிந்து சாம்பராகியது. இதேவேளை வீடுகளுக்குள் பதுங்கிய இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் அருள் 89 தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலுக்கு பல இராணுவத்தினர் பலியாகினர்.

பூவரசங்குளத்திலிருந்து நீதிமோட்டைக்கு இராணுவத்தினர் முன்னேறிச் செல்ல முற்பட்டபோதே இவர்கள்மீது இந்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை பூவரசங்குளம் காக்கையன்குளம் பகுதிகளில் நேற்றுக்காலை சிறிலங்கா விமானப்படை விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன. அத்துடன் உலங்கு வானூர்திகள் 50 கலிபர் தாக்குதலை நிகழ்த்தின.

(6ஆம் பக்கம் பார்க்க)

## விளக்கில்லாத வாகனங்கள் ஓட்டுவதை தவிர்க்கவும்
### - காவல்துறைபொறுப்பாளர்

(யாழ்ப்பாணம்)

இரவில் விளக்கில்லாத வாகனங்களை ஓட்டுவதை தவிர்க்குமாறு தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு நடேசன் கேட்டுள்ளார். கூடுதலாக விளக்குகளில்லாத மோட்டார் சைக்கிள்கள் ஓட்டுவதையும், மதுபோதையில் வாகனங்களை ஓட்டுவதைத் தவிர்க்குமாறும் மீறி (6ஆம் பக்கம் பார்க்க)

காங்கேசன்துறை

## துறைமுகம் திறப்பது பற்றி பலாலியில் முக்கிய பேச்சு

காங்கேசன்துறை துறைமுகத்தை அத்தியாவசியப் பொருள்களை இறக்குவதற்கு வசதியாக திறந்துவிடுவதற்கு தொடர்ந்தும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. இவ் விடயம் தொடர்பாக இன்று பலாலியில் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகளுக்கும், சிறிலங்கா இராணுவ அதிகாரிகளுக்கும் இடையில் முக்கிய பேச்சுவார்த்தைகள் நடைபெற இருக்கிறது. இப் பேச்சுவார்த்தையில் வடபகுதி இராணுவ உயர் அதிகாரிகள் ( 6ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரியில் புலிகள் திடீர் தாக்குதல்
# மூன்று காவல் அரண்கள் அழிப்பு

(பூநகரி)

பூநகரிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களுக்கு சித்தக்குறிச்சி எனுமிடத்தில் அமைக்கப்பட்டிருந்த சிறிலங்கா இராணுவ காவலரண்கள் மீது விடுதலைப்புலிகள் திடீர் அதிவேக தாக்குதலை மேற்கொண்டனர். இந்த அதிரடித் தாக்குதல் நேற்று அதிகாலையில் 10 நிமிடங்களுக்கு நடாத்தப்பட்டது.

இந்த அதிரடித் தாக்குதலால் சிறிலங்கா இராணுவத்தினரின் மூன்று காவலரண்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இவற்றில் ஒன்று முற்றாக எரிக்கப்பட்டது.

இந்தப் பகுதியில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் அண்மையிலிருந்த முகாம்களுக்குத் தப்பியோடிவிட்டனர். விடுதலைப்புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

இத்தாக்குதலை ஊர்ஜிதப் படுத்திய சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் ஒரு இராணுவம் பலியானதாகத் தெரிவித்துள்ளது.

## பூநகரிப் பகுதியில் எறிகணைத் தாக்கு

[குருநகர்]

பூநகரி - ஆலடிப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவம் குடிமனைகளை நோக்கி நேற்று அதிகாலை எறிகணைத்தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பூநகரி பள்ளிக் குடாக்கடல் பகுதியில் இருந்தும் பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதேவேளை உலங்கு வானூர்தியில் இருந்தும் 50 கலிபர் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. மேற்படி தாக்குதலின் சேதங்கள் பற்றிய விபரங்கள் அறிய முடியவில்லை,

அப் பகுதியில் காலை எட்டு மணிபளவிலும் துப்பாக்கி வெடிச் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன. [21]

## வீரச்சாவு
## லெப். காந்த்
## லெப். சுரேஸ்

(யாழ்ப்பாணம்)

பூநகரிப்பகுதியில் நேற்று அதிகாலை சிறிலங்கா இராணுவக் காவலரண்கள் மீது (6ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. சுற்றிவளைப்பில் 5 தமிழ் இளைஞர்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வெல்லாவெளியில் 5 தமிழ் இளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிறன்று வெல்லாவெளி கிராமத்தில் இடம்பெற்ற சுற்றிவளைப் பின்போது இவர்கள் கைது செய்யப்பட்டனர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

### கடற்படையால் கைது செய்யப்பட்ட
## மீனவர்களை விடுவிக்க செஞ்சிலுவை முயற்சி

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா கடற்படையினரினால் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுதலை செய்வது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தொடர்ந்தும் முயற்சி செய்து வருகின்றது.

சிறிலங்கா இராணுவ அதிகாரிகளுடனும், அரச அதிகாரிகளுடனும் இவ்விடயம் தொடர்பாக அடிக்கடி சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் தொடர்பு கொண்டு வருகின்றனர்.

மிக விரைவில் இம் மீனவர்களின் விடுதலை தொடர்பாக ஒரு முடிவு எடுக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக கூறப்படுகிறது. (க)(75)

### அவசரகாலச் சட்டத்தின் கீழ்
## தடுத்துவைக்கப்பட்டோர்மீது குற்றச்சாட்டுகள் இல்லை

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பல இளைஞர்கள் எந்தக் குற்றச்சாட்டுகளும், விசாரணைகளுமின்றி பொலிஸ் நிலையங்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று மனித உரிமைகள் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். அவர்கள் மேலும் கூறுகையில் கம்புறுப்பிட்டியாவில் ஜூன் 1991 இல் கம் உதாவ கொண்டாட்டத்திற்கு சில நாட்கள் முன்னராக பாதுகாப்புக் காரணங்களுக்காக கைது செய்யப்பட்ட பல இளைஞர்கள் இன்னமும் பொலிஸ் நிலையங்களிலேயே தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். எந்தவிதமான குற்றமும் இழைக்காத இவர்களை விடுவிப்பதில் ஜனாதிபதியின் மனித உரிமைக்குழு தலையிடவேண்டுமெனவும் மனித உரிமைகள் சட்டத்தரணிகள் கோரியுள்ளனர்.

சுமார் பத்து புனர்வாழ்வு முகாம்களிலும், ஆறு தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் ஐயாயிரம் இளைஞர்களையும் மனித உரிமைகள் சட்டத்தர (6ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் இளைஞர்கள் கொழும்பில் கைது

(யாழ்ப்பாணம்)

கொழும்பு நகரில் தமிழ் இளைஞர்கள்கண்டபடிபொலிசாரினால் கைது செய்யப்பட்டு வருகின்றனர். கொழும்பு நகரின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் தமிழ் மக்கள் அவ்வப் பகுதி பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்து கொள்ளும்படியும் அறிவித்தல் விடுக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பாக பம்பலப்பிட்டிப் பகுதியில் தீவிர கண்காணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நடைபெற இருக்கும் பரிசளிப்பு விழாவிற்கு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா வர இருப் (6 ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 500 அகதிகள் இன்று நாடு திரும்புவர்

தமிழ் நாட்டில் இருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளில் மேலும் ஒரு தொகையினர் இன்று இராமேஸ்வரத்திலிருந்துபுறப்படுவர் இத்தகவலை மாநில அகதிகள் மறுவாழ்வு சிறப்பு ஆணையாளர் சி.என். ராம்தாஸ் தெரிவித்தார்.

இன்று புறப்படவுள்ள கப்பலில் 500 தமிழ் அகதிகள் தலைமன்னாருக்குச் செல்வர் எனவும் இதுவரை இலங்கை செல்ல விரும்பிய 15000 பேரில் 4000 பேர் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ - து)
சுன்னாகம்

## பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு யாழ். மாவட்டத்தில் வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) பதவி - வங்கிச்சேவைகள் முகாமையாளர்

கு. இல. 111: 07

சம்பளத் திட்டம் :- ரூ. 1105 - 2170 / 60X4 75X11

இத்துடன் சங்கத்தினால் வழங்கப்படும் சகல அலவன்சுகளும் வழங்கப்படும்.

கல்வித்தகைமை:-

அ) கூட்டுறவுப்பணியாளரின் 8ஆவது சம்பளத் திட்டத்தில் 1005 - 1705 / 40x5 50x10 அத்துறையில் முகாமை / மேற்பார்வை மட்டத்திலான பதவியில் மூன்று வருடங்களுக்கு குறையாத அநுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 9ஆவது சம்பளத் திட்டத்தில் 905/- 1605 / 40x5; 50x10 அத்துறையில் முகாமை / மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆறுவருடங்களுக்கு குறையாத அநுபவம் அல்லது

ஆ) இலங்கை வங்கிச் சேவை நிறுவனத்தின் டிப்ளோமா பரீட்சையில் பகுதி 1இல் சித்தியுடன், வர்த்தக வங்கித் தொழிலில் இரு வருடங்களுக்கு குறையாத அநுபவமும் அல்லது,

இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின்பட்டதாரி அல்லது அதற்கிணைந்த தகைமைகளுடன் வர்த்தக வங்கித் தொழிலில் இருவருடங்களுக்குக் குறையாத அநுபவம் அல்லது

ஈ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உயர் தரம்)/க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் 03 பாடங்களிலான சித்தியுடன் வங்கித் துறையில் மேற்பார்வை மட்டப் பதவியில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அநுபவமும்.

வயது:- விண்ணப்ப முடிவுத் திகதியன்று 23 வயதுக்கு குறையாமலும், 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

பிணை:- ரொக்கப் பிணை ரூ. 4420/-
ஆதனப் பிணை ரூ. 15000/-

2) கிராமிய வங்கி முகாமையாளர் கு. இல. 205:11

சம்பளத்திட்டம்: 805 - 1260 / 25x7, 35x8

இத்துடன் சங்கத்தினால் வழங்கப்படும் சகல அலவன்சுகளும் வழங்கப்படும்.

கல்வித்தகைமை:-

அ) கிராமிய வங்கித்துறையில் 12ஆவது சம்பளத் திட்டத்தில் ரூ. 760 - 1185 / 25x10 35x5 இரு வருடங்களுக்குக் குறையாத அநுபவமும், அல்லது அதை ஒத்ததுறையில் 13ஆவது சம்பளத் திட்டத்தில் ரூ. 730 - 1055 / 20x10 25x5 நான்கு வருடங்களுக்கு குறையாத அநுபவமும் அல்லது,

ஆ) கிராமிய வங்கி லிகிதர் பதவியில் இரு வருடங்களுக்குக் குறையாத அநுபவமும், கூட்டுறவுப் பணியாளர் உயர்தராதரப் பத்திரமும்,

வயது:- விண்ணப்ப முடிவுத் திகதியன்று 23 வயதுக்கு குறையாமலும் 40வயதுக்கு மேற்படாமலும்இருத்தல் வேண்டும்.

பிணை:- ரொக்கப்பிணை ரூ. 4025/-
ஆதனப்பிணை ரூ. 15000/-

விண்ணப்ப முடிவுத் திகதி: 03 - 03 - 92

பொது:-

பின்வரும் சான்றிதழ்களின் உண்மைப் பிரதி விண்ணப்பத்துடன் தவறாது இணைக்கப்படல் வேண்டும். இவற்றின் மூலப்பிரதிகள் நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அ) கல்வி ஆ) பிறப்பு இ) வதிவிடத்தன்மை
ஈ) இரு நற்சான்றிதழ்கள் (அண்மையில் பெற்றது.)
உ) சங்கப் பணியாளருக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

விண்ணப்பங்கள் யாவும் 03-03-92 அன்று பிற்பகல் 4 00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக பொதுமுகாமையாளர், சுன்னாகம் பல நோ. கூ. சங்கம், சுன்னாகம் என்ற முகவரிக்கு நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை ரூ. 5/- செலுத்தி வேலை நாட்களில் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்
சுன்னாகம்,
24-02-92 (சி-3960)


## வரி விளம்பரம்


### மீன் தூள் விற்பனை

கோழித் தீன் மற்றும் கால் நடை உணவுகளுக்கு சேர்க்கப்படும் புரதச்சத்து நிறைந்த மீன் தூள் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள், உதயம் பல்பொருள் அங்காடி, ஆரிய குளம் சந்தி, யாழ்ப்பாணம். (3962)


## விசேட படி

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டத்தில் அதிகரிக்கப்பட்ட நூறுரூபாய் விசேடபடி தற்காலிக ஊழியர்களுக்கும், நாளாந்த கூலியாட்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்று பொது நிர்வாக அமைச்சு பணிப்புரை வழங்கியுள்ளது.

இது குறித்த பணிப்புரையினை சகல நிறுவனங்களுக்கும் இந்த அமைச்சு அறிவித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரத்தம் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனை இரத்தவங்கியில் இரத்தவகைகள் தீர்ந்துவிடும் நிலையில் உள்ளது. அனைத்து வகை இரத்த வகைகளும் முடிவடைந்து வருவதனால் தயவுசெய்து இரத்ததானம் செய்ய விரும்புவோர் உடனடியாக இவ்வைத்தியசாலை இரத்தவங்கியுடன் தொடர்பு கொள்ளும் படி நோயாளர் நலன்புரிச்சங்கம்கேட்டுள்ளது' (க)

## காவலிலிருந்து தப்பினர்

(சென்னை)

தமிழக அரசின் பாதுகாவலிலிருந்த இரு இலங்கை அகதிகள் தப்பிவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பெயர்களைப் பதிவு செய்யாததற்காக விசேட தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அன்டன் (25) வவுனியாவைச் சேர்ந்த ராயப்பன் (23) ஆகிய இருவருமே தப்பியுள்ளவர்கள் என்று தெரிய வருகிறது.

## எட்டுப் பேரை சுட்டுக்கொன்றார்

(பெஷவர்)

கட்டுப்பாட்டை மீறிய ஆப்கான் அகதி ஒருவர் எட்டுப் பேரைச் சுட்டுக் கொன்றதை அடுத்து, கிராமவாசிகள் பலர் ஒன்றுகூடி இந்த அகதியை சுட்டுக்கொன்றனர்.

பெஷாவரில் வடமேல் பாகிஸ்தான் நகரருகே மாவோசி என்னும் கிராமத்தில் இச்சம்பவம் நடைபெற்றது.

இவர் தனது மைத்துனரையும் மனைவியையும் சுட்டுக் கொன்றதுடன் தனது மனைவியையும்சுட்டுக் காயப்படுத்திவிட்டு ஏனையகொலைகளைச் செய்துள்ளார்.

கழுத்தில் குர்ஆன் பிரதி ஒன்றை கட்டித் தொங்கவிட்டிருந்தே இக்கொலைகளைச் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முத்திரை வெட்டு

ஜனசக்தி முத்திரைகள் மீளப் பெறப்பட்டு உணவு முத்திரைகள் வழங்கப்பட்டு வரும் குடும்பங்களுக்கு மண்ணெண்ணெய் முத்திரைகள் நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் செயற்படுத்தப்பட்ட ஜனசக்தி முத்திரைகள் 1990இல் ஆரம்பமான யுத்தத்தையடுத்து செயல் இழந்தது தெரிந்ததே.

ஜனசக்திமுத்திரைகள் வழங்கப்பட்டபோது திரும்பப் பெறப்பட்ட உணவு முத்திரைளுடன் மண்ணெண்ணெய் முத்திரைகளும் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(21)

## றிங்கோ ஸ்ரார் கழகம் சம்பியனானது

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் அவையினரால் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் திருமலை நட்சத்திரங்கள் விளையாட்டுக்கழகம், சென். றோக்ஸ் அணியை 2 இற்கு 1 என்ற கோல்கள் வித்தியாசத்தில் வென்றது. இச் சுற்றுப் போட்டியில் மூன்றாவது இடத்தை சென். மேரிஸ் அணி பெற்றுக்கொண்டது.


## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப்டினன் கேணல் ஜொனி

(திரு. விக்கினேஸ்வரன் விஜயகுமார்)

(சாரையடி, புலோலி)

தாயின் மடியில் தாயக மண்ணில்
21. 05. 1962 13. 03. 988

திதி: 27. 02. 1992 (வியாழக்கிழமை)

இந்திய உளவுப் பிரிவினால் இந்தியாவிலிருந்து பேச்சுவார்த்தைக்கென அழைத்து வரப்பட்டு முல்லைத்தீவு மாவட்டம் தேவிபுரம் எனும் இடத்தில் இந்திய ஆக்கிரமிப்புப் படையால் நயவஞ்சகமாக சுட்டுக் கொல்லப்பட்ட லெப்டினன் கேணல் ஜொனியை இந் நாளில் நினைவு கூருகின்றோம். இவரின் ஆத்மா சாந்தி அடையவும் கனவு நனவாகவும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

''கோகுலகிரி''
நெல்லியடி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தந்தை, சகோதரிகள்,
மைத்துனர்கள், மருமக்கள்
உற்றார், உறவினர்,
நண்பர்கள்,
(2234)



## நினைவு கூருகின்றோம்

1992-02-26

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் பரந்தன் சந்தியில் சிறிலங்காப் படையினரின் சுற்றி வளைப்பின் போது வீரச்சாவெய்திய-
**பாலா**

1987ஆம் ஆண்டு சாவகச்சேரியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எம்மைப் பிரிந்த -
**லொயிட்** [மணியம் விமலசேகர் - சாஸ்திரி கூழாங்குளம், வவுனியா]

1989ஆம் ஆண்டு சுண்டிக்குளத்தில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய -
**லெப். சரத்** [லேஞ்சிபூஸ் பீற்றர் கெனடி - தாளையடி]

கோடாலிக்கல்லில் இந்தியப் படையினரின் பொறிவெடியில் சிக்கி வீரச்சாவெய்திய -
**ஜஸ்ரின்** [ஆறுமுகம் புலேந்திரன் - முள்ளியவளை, முல்லைத்தீவு]

முல்லைத்தீவு, வற்றாப்பளைப் பகுதியில் தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட முள்ளியவளையைச் சேர்ந்த இளைஞன்

1991ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்காப்படையினருடனான மோதலின் போது காயமுற்று யாழ். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் போது வீரச்சாவெய்திய -
**பாலேந்திரன்** [குமாரசாமி பாலசுப்பிரமணியம் - நாவற்காடு, முள்ளியவளை]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(சி/3959)

யாழ்ப்பாணம்

# குடியேற்றத்தை நிறுத்துக; புதிய கடனுதவி கிடைக்காது

## இஸ்ரேலுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

(வாஷிங்டன்

ஆக்கிரமித்துக் கொண்ட மேற்குக்கரை, காஸாப் பகுதிகளில் யூதர்களுக்கான குடியிருப்பு கட்டுமானப் பணிகளை இஸ்ரேல் முற்றிலும் நிறுத்தா விட்டால் இஸ்ரேலுக்கு புதிய கடன் உத்தரவாதம் அளிக்க முடியாது என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இஸ்ரேலுக்கு நிதியுதவி அளிப்பது குறித்து நடக்கும் இரகசிய பேச்சுக்களைப் பற்றி வாஷிங்டனில் பாராளுமன்றக் குழு முன்னால் சாட்சியமளித்த அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜேம்ஸ் பேகர் இதனைத் தெரிவித்தார்.

அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்டனில், அரபு-இஸ்ரேல் குழுக்கள் நான்காவது சுற்று சமாதானப் பேச்சுக்களை தொடங்கி இருக்கும் தருணத்தில் அமெரிக்காவின் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்ளும் அரபுக் குழுக்கள் ''ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து இஸ்ரேல் பின் வாங்க வேண்டும்'' என்று வலியுறுத்தி வருகின்றன.

# ஐ.நா. பாதுகாப்புச் சபை ஈராக்கிற்கு எச்சரிக்கை

(நியூயோர்க்)

எதிர்காலத்தில் ஈராக் தனது ஆயுத உற்பத்தியைக் கண்காணிக்க மறுத்தாலும், ஐ.நா ஆயுத சோதனையாளர்களுடன் முழுமையாக ஒத்துழைக்காவிட்டாலும் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என ஐ.நா. பாதுகாப்புச்சபை எச்சரித்துள்ளது.

ஈராக்கின் ஆயுத ஒழிப்பு சம்பந்தமான விசேட ஆணைக்குழுவின் நிர்வாகத் தலைவர் ரோல்ப் எக்குயஸ் இது சம்பந்தமாக அந்நாட்டு உயர் தலைவர்களைச் சந்தித்து நிபந்தனையற்ற முறையில் ஒத்துழைக்கும் உறுதியைப்பெறுமாறு கோரப்பட்டிருக்கிறார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த விடயத்தில் ஈராக் ஒத்துழைக்காவிட்டால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என ஈராக்கிடம் கண்காணிப்பு ஆணைக்குழு தெரிவிக்க வேண்டும் எனவும்-

ஈராக்கில் மனித உரிமைகள் மோசமாக மீறப்படுவதைக் கண்காணிக்கும் வகையில் முழுநேர அவதானிகள் குழுவொன்றை அங்கு அனுப்பி வைக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் சோவியத்

# குடியரசுகள் 1500 கோடி டொலரை கடனாகப்பெறும்

(லண்டன்)

முன்னாள் சோவியத் குடியரசுகள் அடுத்த மூன்று ஆண்டுகளில் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 1500 கோடி டொலர்களுக்கும் அதிகமான தொகையை கடனாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

செல்வந்த, கைத்தொழில் நாடுகளால் மேற் கொள்ளப்பட்டுள்ள திட்டமொன்றின் பிரகாரம் இது சாத்தியம் என்றும் சர்வதேச நாணய நிதியமைப்பு தெரிவித்துள்ளது

# கடலோரப் படையை விலக்கக் கோரிக்கை

(சென்னை)

தமிழ்நாட்டில் கோடியாக் கரை பகுதியில் 'பூநாரை' இல்லத்தில் முகாமிட்டிருக்கும் கடலோரக் காவற்படையின் அட்டகாசத்தினால் அப்பகுதி மக்களிடையே பதற்றமும், பீதியும் தோன்றியுள்ளதாக தமிழகச் சஞ்சிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

பெண்கள் குளிக்குமிடங்களில் ஆடையின்றிக் குளிப்பது முதல் உடற்பயிற்சி என்ற போர்வையில் அரைகுறை ஆடைகளோடு கிராமத்தினுள் நடமாடுவதுவரை இப்படையினது அட்டகாசங்கள் அதிகரித்துள்ளன. படையினரின் இத்தகைய அடாவடித்தனங்களைக் கண்டிக்கும் கிராமத்தவர்கள் கடலோரக் காவற்படையினரால் கைது செய்யப்படுதல், துன்புறுத்தல் ஆகியவற்றிற்கு இலக்காகி வருகின்றனர்.

இதன் காரணமாக கடலோர காவற்படையின் இம்முகாமை அகற்றும்படி அல்லது இடம் மாற்றும்படி உள்ளூர் மக்கள் அதிகாரிகளை வற்புறுத்தி வருகின்றனர்.

# இராணுவம் துப்பாக்கிச் சூடு; பாக். இராணுவம் பலி

(டில்லி)

இந்திய - பாகிஸ்தான் எல்லையில் இரு தரப்பு இராணுவங்களுக்குமிடையில் ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையில் பாகிஸ்தான் தரப்பில் ஒரு இராணுவ வீரர் உயிரிழந்தார் என்றும், இரு தரப்பிலும் குறைந்தது பதினொரு பேர் படுகாயம் அடைந்தனர் என்றும் இந்திய தரப்புச் செய்திகள் கூறுகின்றன

காஷ்மீர் பகுதியில் பாகிஸ்தான் இராணுவத்தினர் இந்திய எல்லையைத் தாண்டிப் பதுங்கு குழிகளை அமைக்க முயற்சித்தனர் என்றும் இந்திய இராணுவ நிலையங்கள் மீது சுழல் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டனர் என்றும் இந்திய தரப்பு கூறுகிறது. இந்திய இராணுவம் பதிலடியாக உடன் துப்பாக்கித் தாக்குதல் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

# வத்தள குண்டுவில் குண்டு வெடிப்பு

(சென்னை)

அண்ணா மாவட்டம் வத்தள குண்டு அரசின் உயர் நிலைப் பள்ளி வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு விபத்தில் எவருக்கும் காயமேற்படவில்லை என தமிழக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பள்ளி வளாகத்தில் இக்குண்டு வைக்கப்பட்டிருந்தது என்றும், கோடை வெய்யில் காரணமாக அது வெடித்திருக்கலாம் என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் கடந்த ஞாயிற்றுக் கிழமை பேருந்து நிலையம் அருகே நின்றுகொண்டிருந்த இப் பள்ளியைச் சேர்ந்த ஊழியர் ஒருவர்மீது அடையாளம் தெரியாத நபர் குண்டு வீசியதில் அவர் காயமடைந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ராம ஜென்மபூமி-பாபர் மசூதி விவகாரம்;

# உத். அரசின் யோசனையை இணைப்புக்குழு நிராகரிப்பு

(டில்லி)

ராமஜென்மபூமி- பாபர் மசூதி பிரச்சினை குறித்து பேச்சு வார்த்தை நடத்தலம் என்ற உத்தரப்பிரதேசஅரசின் யோசனையை பாபர் மசூதி ஒருங்கிணைப்புக் குழு நிராகரித்து விட்டது.

இந்தப்பிரச்சினையின் நிலையான யோசனையை அரசு தெரிவிக்காத வரையில்மேலும் பேச்சு வார்த்தை நடத்துவதால், பயன் எதுவும் இருக்காது என்றும் பாபர்மசூதியின் ஒருங்கிணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

# குழந்தைகள் படுகொலை

பிரேஸிலில் அமைக்கப்பட்டுள்ள கொலைக் குழுக்கள் தினமும் சராசரி இரண்டுக்கு மேலான தெருப்பிள்ளைகளைச்சுட்டுக் கொல்வதாக விசேஷ பாராளுமன்றக் கமிஷன் ஒன்று கூறியுள்ளது.

சில எம். பி. க்கள், சட்ட அதிகாரிகள் ஆகியோரின் ஆதரவுடன் கொலைகாரக் குழுக்கள் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர் என்றும், வேண்டுமென்றே தெருப்பிள்ளைகள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள் என்றும் கமிஷன் கூறியுள்ளது.

ரியோடிஜெனிரோவிலேயே அதிகக் கொலைகள் இடம்பெறுகின்றன மாதம் சராசரி 45 பிள்ளைகள் அங்கு கொல்லப்படுகின்றார்கள். பெரணாம்புகோ மாகாணத்தில் மாதம் 18 பிள்ளைகள் வீதம் கொல்லப்படுகிறார்கள்.

உலகம் பூராவுமுள்ள மனித உரிமைக்குழுக்கள் இக்கொலைக்கு பொலிஸாரையும் அதிகாரிகளையும் குற்றம் சாட்டியுள்ளன

உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் ரியோ நகரின் பெருமை இத்தகைய தெருப்பிள்ளைகளினால் பாதிக்கப்படுகிறது என்பதே இக்கொலைகளுக்குக் காரணம் ஆகும்.

# பத்துலட்சம் பேர் எயிட்ஸ் வைரசினால் பாதிப்பு

## சுகாதார ஸ்தாபனம் தகவல்

(ஜெனீவா)

ஒரு வருட கால எல்லைக்குள் உலகின் பல்வேறு நாடுகளிலும் பத்து லட்சத்திற்கும் அதிகமானோர் 'எயிட்ஸ்' நோய் வைரசினால் பாதிக்கப்படுவர் என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

இந்த ஸ்தாபனம் விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே இது குறிப்பிடப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து இந்த வருடம் ஏப்ரல் மாதம் வரையான ஒரு வருட கால எல்லைக்குள் உலகின் பல்வேறு நாடுகளிலும் குறிப்பாக ஆபிரிக்க சகாரா பாலைவனப் பகுதியிலுள்ளவர்களே இதில் அரைவாசிக்கும் அதிகமானோர் என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு எயிட்ஸ் வைரஸ் கிருமியினால் பாதிக்கப்பட்டவர்களில் ஐந்து லட்சம் பேர் குழந்தைகள் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜே. கே. எல். எப். பிற்கு பாக். ஆயுதம் அளிக்கிறது

## -சரத்பவார் குற்றச்சாட்டு

இந்தியாவால் தடை செய்யபபட்ட ஐம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி தூண்டிவிடப்படுகிறது. பாகிஸ்தான் அதற்குஆயுதங்களையும், நிதியையும்அளிக்கிறது என்று இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் சரத்பவார் குறிப்பிட்டுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசும் போதே அவர் இவ்வாறுதெரிவித்தார்.

# அல்ஜீரியாவில் பத்து வெளிநாட்டு மாணவர் கைது

(அல்ஜியர்ஸ்)

அல்ஜீரியாவில் இஸ்லாமிய அடிப்படைவாதக் குழப்பத்தை ஊக்கப்படுத்தினார்கள் என்ற குற்றத்திற்காக ஒரு பிரித்தானியர் உட்பட பத்து மாணவர்களை பாதுகாப்புப் படையினர் ஓரான் நகரில் கைது செய்தனர்.

பிரித்தானிய மாணவனுடன் ஐந்து சூடானிய, இரண்டு லெபனான், இரண்டு பாலஸ்தீன ஒரு மொரக்கோ மாணவர்களைப் படையினர் கைது செய்தனர் இது வரை இஸ்லாமிய அடிப்படை வாதிகள் ஐயாயிரம் பேர் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி மாணவர்கள் ஓரான் பல்கலைக் கழகத்தில் படிப்பவர்களாவர். அங்கு குழப்பத்துக்கு தூபமிட்டவர்கள் இவர்கள் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. இஸ்லாமிய அடிப்படைவாத ஆதரவாளர்களைத்தடுத்து வைப்பதற்கென சஹாரா பாலைவனத்தில் முகாம்கள் திறக்கப்பட்டுள்ளன.

# பில் கிளின்டனுக்கு மேலும் பின்னடைவு

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில் வேட்பாளர் பில் கிளின்டன் மேலும் பின்னடைவுகளைச் சந்தித்துள்ளார்.

தற்போது ஆர்கன்ஸால்ஸ் மாநில கவர்னராக இருப்பவரும், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடுபவருமான பில் கிளின்டன், வியட்நாம் யுத்தத்தில் அமெரிக்கா ஈடுபட்டபோது இராணுவ கடமைக்கு தான் செல்லாமலிருக்க உதவியதற்காக இராணுவ ஆலோசகருக்கு எழுதிய நன்றிக் கடிதம் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. அவருக்கு தேர்தல் பிரச்சாரத்தில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியிருப்பதாக அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# பஞ்சாப் முதலமைச்சராக பியான்சிங் பதவியேற்பு

பஞ்சாப் இந்திராகாங்கிரஸ் சட்டப்பேரவையின் தலைவர் பியான் சிங் நேற்றுக் காலை முதலமைச்சராகப் பதவியேற்றார்.

முன்னதாக முதலமைச்சராக பதவியேற்கும்படி பஞ்சாப் ஆளுநர் டாக்டர் சுரேந்திரநாத் அழைப்பு விடுத்திருந்தார்.

ஐம்பத்தியேழு மாத காலமாக மாநிலத்தில் நிலவிவந்த ஜனாதிபதி ஆட்சி முதலமைச்சர் பதவியேற்புடன்முடிவுக்குக் கொண்டுவரப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மாநிலத்தில் மூன்றடுக்கு அமைச்சரவை பதவியேற்கும் என்று தான் எதிர்பார்ப்பதாக பஞ்சாப் முதலமைச்சர் பியான்சிங் பத்திரிகையாளரிடம் தெரிவித்துள்ளார்.

தமது அரசாங்கம் மாநிலத்தில் இயல்பு நிலையை மீண்டும் கொண்டு வருவதற்கும் திசைமாறிய இளைஞர்களை தேசிய பொதுவாழ்வில் மீண்டும் இணையச் செய்வதற்கும் முன்னுரிமை அளிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பியான்சிங் நேற்று முன்தினம் சண்டிகாரில் இடம்பெற்ற கூட்டமொன்றில் சட்டப்பேரவைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

# தமிழீழ விடுதலைப் புலிகள் சமருக்கு ஆயத்தமாகின்றார்கள்

கடைசியாக வெளிவந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ வெளியீடான ''விடுதலைப் புலிகள்'' பத்திரிகையில் மாத்தயா யாழ்ப்பாணத் தமிழ் மக்களுக்கு விடுத்த செய்தியில் ''நாங்கள் படையெடுப்பை முறியடிக்கத் தீர்மானித்துள்ளோம்'' என்ற தலைப்பில் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இராணுவத்தினர் யாழ்ப்பாணத்திற்குள் தாக்குதல் நடத்தவுள்ளமையையும், விடுதலைப்புலிகள் சமாதானம் பற்றி தற்போது கொண்டுள்ள நிலையையும், அவ்வெதிர்ப்புகளுக்கு யாழ்ப்பாண மக்கள் எவ்விதம் தயாராக வேண்டுமென்பதையும் கூறுவதே அச்செய்தியாகும். அச்செய்தியில் ''நாங்கள் சமாதானக் கதவுகளை நன்றாகத் திறந்து வைத்திருக்கிறோம். ஆனால் சிறிலங்கா அரசாங்கம் போர்ப்பறையையே தொடர்ந்து அடித்துக் கொண்டிருக்கிறது'' என்றும் அரசாங்கம் பேச்சுவார்த்தையில் அக்கறை கொண்டிருக்கவில்லை என்றும் கூறுகிறது.

அவர்கள் சுலபமாக வெற்றி கிட்டும் என நினைக்கிறார்கள். அரசாங்கத்தின் இன்றைய நிலை புலிகளைப் பலவீனப்படுத்துவதாகும். ஒரு குறிப்பிட்டளவு பிரதேசம் தம் கைவசம் வரும் வரை போரை நடத்தி அதன் பின்னர் அவர்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்துத் தம் தீர்வுகளைத் திணிக்கவே சிறிலங்கா விரும்கிறது, இதன் காரணமாகத் தான் குடா நாட்டில் ஒரு பாரிய படையெடுப்பைநடாத்துவதற்கான சகல ஆயத்தங்களையும் அரசாங்கம் செய்கிறது. விடுதலைப்புலிகள் பலமுடையவர்களாக இருக்கும் வரை தங்களது அரைகுறைத் தீர்வுகளை அவர்களிடம் திணிக்க முடியாதென்பது அதற்குத் தெரியும். ஆகவே புலிகளை அழிப்பது தமிழர் போராட்டத்தை அடக்கியதற்குச் சமம் என்று அரசாங்கம் எண்ணுகிறது.

எதிரியின் படையெடுப்பை நாம் முறியடிக்க வேண்டும். சிங்கள அரசாங்கத்தின் படையெடுப்புக்கு முகம் கொடுக்க எங்கள் போராளிகள் தயாராகுகிறார்கள். குடா நாட்டுக்குள் சிங்கள இராணுவம் உட்புகுந்தால் நாம் கடந்தகாலங்களில் நடத்திய சமர்கள் எல்லாவற்றிலும் பார்க்க பாரிய உக்கிரமான சமராக அது அமையும் அவ்வித படையெடுப்பை எதிர்ப்பதற்கு நாம் உடனடியாக பாரிய ஆயத்தங்களைச் செய்ய வேண்டும். பாரிய ஆயத்தமெனக் குறிப்பிடும்போது பெருமளவில் படைக்குப் போராளிகள் தேவை என்பதேயாகும். இதனைப் புலிகளால் மாத்திரம் ஈடுசெய்யமுடியாது. தேவைக்கேற்ப மக்களும் புலிகளாக மாறவேண்டும்.

ஆனையிறவு, மணலாறு (வெலிஓயா) சமர்களில் மக்கள் அளித்த பங்கு எமக்கு பெரும் ஊக்குவிப்பைக் கொடுத்துள்ளது. அப் போர்க்களங்களுக்கு வெளியே அவர்கள் ஆற்றிய பங்கு வரலாற்றில் பெருமைக்குரிய ஒன்றாக இடம்பெறும்.

அது போன்ற பங்களிப்பை எதிர்வரும் போரிலும் நாங்கள் மக்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். இந்தப் போரில் மக்களின் தற்பாதுகாப்போடு போர்முனைப் பின்னணி வேலைகளும் பின்னிப்பிணைந்திருக்கின்றன. அதாவது வெள்ளம் வருமுன் அணைகட்டுவது போன்று வருமுன் காப்பு வேலைகளும் அதற்கான கடமைகளும் செய்யப்பட வேண்டும் ஒவ்வொரு கிராமத்திலும் தொண்டர் படை உருவாக்கப்படல், பதுங்குகுழிகள் எங்கும் அமைத்தல், உலர் உணவுப் பொருட்கள் சேகரித்து பாதுகாத்து வைத்தல், வதந்திகள் பரவாமல் தடுத்தல், மக்கள் நகர்வுகளைத் தடுத்தல் போன்ற வேலைகள் செய்யப்படவேண்டும். வதந்திகளையும் தேவையற்றமக்கள் நகர்வுகளையும் தடுப்பதற்கு ஒவ்வொரு கிராமத்திலும் தகவல் இணைப்பாளர்கள் நியமிக்கப்படல், இரத்ததானம் செய்வதற்கும் காயமுற்றோரைப் பராமரிக்கவும் குழுக்கள் நியமித்தல் சில இடங்களில் விழிப்புக் குழுக்களை உருவாக்கல் இவற்றோடு சமரில் இறக்கும் போராளிகளின் இடங்களை நிரப்ப இளைஞர்களும் இளம் பெண்களும் எமது போராட்டத்தில் இணையவேண்டும்.

விடுதலைப் புலிகள் யாழ்ப்பாண மக்களுக்கு விடுத்த செய்தியில் தொண்டமானின் உத்தேசத் தீர்வுத்திட்டத்தில் அவர்கள் ஓரளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது. அதுவுமல்லாமல் எதிர்வரும் சமரை, அதாவது ஆனையிறவு சமருககுப் பின்னர் ஓர் இறுதி (தாய்) சமராக முதன்மைப்படுத்துவதன் மூலம் சர்வதேச ரீதியில் இது கணிக்கப்படுமென்றும் அத்துடன் ''இப்பாரிய சமருக்கு'' உத்வேக மூட்டப்பட்ட இளைஞர்கள் பெரும் தொகையாகச் சேர்வார்களென்றும் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதும் தெளிவாகிறது. ஆனையிறவில் நடந்தது போல் இச் சமரிலும் சிறுவர்கள் பலர் இறப்பார்கள்.

(அங்கு இறந்த விடுதலைப் புலிகள் உறுப்பினர்களில் ஒருவரான திருச்செல்வம் கஜேந்திரன் 25-5-77 இல் பிறந்த 13 பிராயத்தினராவர். மற்றவர் 22-3-76 இல் பிறந்த 14 வயதான மல்லிகா பொன்ராசா என்னும் பெண்பிள்ளையாவார்.)

## — தராக்கி —

''விடுதலைப்புலிகள்'' பத்திரிகை (பக்கம் 3) இன்படி குடாநாட்டின் இருதய பகுதியை அடையும் நோக்குடன் எல்லைப் புறங்களின் பல முனைகளில் அல்லது இடங்களில் இராணுவம் சமகால தாக்குதல்களைச் செய்யலாம் என விடுதலைப்புலிகள் எண்ணுகிறார்கள். இராணுவம் கைக்கொள்ளும் என எண்ணும் அவர்களின் இத்தந்திரோபாயம் விடுதலைப் புலிகளின் படைத் தலைவர்களுக்கு பெரும் தலையிடியைக் கொடுக்கும்.

படைத்தலைவர்கள் பிழையான தந்திரோபாயங்களைத் தேர்ந்துகொள்ளுதல் என்ற தலைப்பில் யோமினி என்னும் படைத்தளபதி நீண்ட ஆய்வு ஒன்றைச் செய்யும்போது பல படைத் தலைவர்கள் இடங்களை அல்லது பலவீனமான படையை பாதுகாக்க எத்தனிக்கும்போது எங்கே எப்போது எவ்விதம் தாக்குதலை நடாத்தலாம் என்று தீர்மானிக்கும் சாதக நிலையை எதிரிக்கு விட்டுக் கொடுக்கிறார்கள் என்று கூறியுள்ளார். மேற்குலக போராட்ட வரலாற்றில் அத்தகைய தலைவர்கள் இயற்கையான பல நடமாட்ட வழிவகைகளை பாதுகாக்கவோ அல்லது அவற்றைக் கொண்டு பயனடையவோ தெரியாமல் தமது படையை பலதரப்பட்ட எதிர்பார்ப்புகளை எண்ணிப் பிரித்து விட்டதன் காரணத்தால் முடிவில் தவிர்க்க முடியாத நிலையில் அழிவைத்தான் அடைந்தார்கள்.

### பிழையான தேர்வுகள்

மேலெழுந்தவாரியாக எடுத்துப் பார்த்தால் புலித் தலைவர்களும் யோமினி விளக்கிக் கூறியது போன்ற அவ்விதமான பிழையான தந்திரோபாயத்தைத் தான் தவிர்க்க முடியாமல் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கும் எனத்தோன்றும். முதலில் மாத்தயாவின் செய்தியின்படி பார்த்தால் குடா நாட்டை பாதுகாப்பது என்ற நிலைப்பாட்டின்படி, தனது உயர்ந்த நிலையிலுள்ள படையினரைக் கொண்டு எப்போது எங்கே, எவ்விதம் தாக்குவது என்று தீர்மானிக்கும் சாதக நிலையை இராணுவத்திற்கு விட்டுக் கொடுத்து விட்டார்கள் போல் தெரிகிறது.

இரண்டாவதாக, குடா நாட்டில் இராணுவம் என்ன செய்யப் போகிறது என்று தெரியாத நிலையில் புலிகள் தமது பெறுமதி மிக்க போராளிகளை குடா நாட்டுக்குள் இராணுவம் முன்னேறித் தாக்கி நிலைகொள்ளலாமென எதிர்பார்க்கும் இடங்களுக்கு பிரித்து அனுப்ப வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாவர். அவ்விதமாயின் கடந்த இரண்டு மாத காலமாக குடா நாட்டின் குறிப்பிட்ட தற்காப்பு நிலைகளை நோக்கி நடைபெற்ற பாரிய வடபகுதி இராணுவத்தின் மாற்றங்களும் புலிப்படையினரை அந்நிலைகளில் நிலைகொள்ளும் விதத்தில் பிரித்துப் பரப்பியிருக்க வேண்டும். அப்படியானால் இராணுவம் தன் முழுப்பலத்துடன் அப்படிப் பிரித்துப் பாதுகாக்கப்பட்டிருக்கும் சிறுபகுதியைத் தாக்கி அப்பகுதியில் இராணுவ ஆதிக்கத்தை ஏற்படுத்தலாம்.

இங்குள்ள முக்கிய பிரச்சினை யாதெனில் இராணுவ நகர்வுகளும், யாழ்ப்பாணத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான சமர் நடைபெறப் போகிறது என்ற அரசின்பிரசாரமும்விடுதலைப் புலிகளை பிழையான தந்திரோபாயத் தேர்வை எடுக்கச் செய்ததா? என்பதேயாகும். யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் இராணுவ ரீதியான எதிர்காலத்தை இருவிடயங்களைக் கவனிப்பதன் மூலம் தெரிந்து கொள்ளலாம். ஒன்று குடாநாட்டின் எல்லைப்புறங்களில் உள்ள குறிப்பிட்ட தாக்க நிலைகளின் இயற்கைச் சூழல். அடுத்தது விடுதலைப் புலிகளின் உள் தாக்கங்களும், கட்டாயம் செய்யப்பட வேண்டியவைகளுமாகும்.

புலிகளின் கணிப்பின்படி யாழ்ப்பாணப் படை எடுப்பு குடாநாட்டின் எல்லைப்புறங்களிலுள்ள ஐந்து இடங்களிலிருந்து உள்நாட்டை நோக்கி நடைபெறலாம். அவையாவன (1)பூநகரி, கேரதீவு, சாவகச்சேரி வலயம். (2) இடைக்காடு தொண்டமனாறு. வடமராட்சி உட்பகுதி. (3) வல்லிபுரம் நாகர் கோவில் தாளையடி கரையோரம் வடமராட்சி உட்பகுதி. (4) பொன்னாலை, மூளாய், சுழிபுரம், மாதகல் கரையோரமும் அதைச் சேர்ந்த பகுதியும். (5) அராலித்துறை, பொம்மைவெளி யாழ்நகர், அரியாலை, பூம்புகார்.

வடக்கில் 20 மாத கடும் சமரின் பின் குடாநாட்டின் தெற்கு, தென்மேற்கு, வடமேற்கு எல்லைப்புறங்களில் கேந்திர முக்கியத்துவம் உள்ள மூன்று இடங்களை இராணுவம் பிடித்திருக்கிறது. யாழ்ப்பாணத்தின் சிவப்புமண் பிரதேசங்களையும் வடமராட்சி உட்பகுதியையும் இவ்வலயங்கள் ஊடாகத்தாக்கி நிலைகொள்ளலாம். தென், தென்மேற்கு வலயத்திலுள்ள ஊர்காவற்றுறை, பூநகரி ஆகியன(1)யு i (5)யும்தாக்கக்கூடியனவாயுள்ளன. காரைநகர், தீவு, பலாலி கரங்கேசன்துறையைக் கொண்ட வடமேற்கு வலயம் (2) யும் (4)யும் தாக்க இடங்கொடுக்கும் வெற்றிலைக்கேணி கடல்தரை சமரில் திறமை காட்டிய சிறிலங்கா இராணுவத்துக்கு (3) வதை உடைக்க முடியும்.

(நன்றி: 09-02-1992 ஐலண்ட்)

---

வவுனியா நகரப் பகுதியில்

## சிங்களக் குடியேற்றங்கள்; தமிழர் ஆட்சேபம்

(வவுனியா)

வவுனியா நகரப்பகுதியில் ஏற்படுத்தப் பட்டுள்ள புதிய சிங்களக் குடியோற்றத் திட்டம் பற்றி பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது,

தமது சொந்த நிலம், வீடுகளைவிட்டு வெளியேறி பாதுகாப்புக் கருதி வேறிடங்களில் தங்கியிருந்த தமிழ்க் குடும்பங்கள் இராணுவம் மற்றும் அரச அதிகாரிகளின் குடியேற்ற நடவடிக்கையை அறிந்து கொக்கரித்துள்ளனர்.

வவுனியா அரச அதிகாரிகளிடம் முறையிட்டுள்ள இந்த அகதி மக்கள் தமது நிலங்களையும், வீடுகளையும் தமக்கே மறுபடியும் வழங்கும்படி கேட்டுள்ளனர்.

வவுனியா நகருக்குத் தெற்கே உள்ள தேக்கங் காடு, தோணிக்கல் பகுதிகளில் புதிதாகப் பல சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டு வருவது அறிந்ததே.

தற்போது உரிமை கோரி வராத தமிழ்க் குடும்பங்களின் காணிகளில் சிங்கள மக்களைக் குடியேற்ற ஆலோசனை செய்யப்பட்டுள்ளதாம். (தி)

## வயிற்றோட்டத்திற்கு சிறுமி பலி

(கொடிகாமம்)

வயிற்றோட்ட நோய் காரணமாக சிறுமி ஒருவர் மரணத்தைத்தழுவிக் கொண்டுள்ளார். சாவகச்சேரி மருத்துவமனையில் வயிற்றோட்ட நோய் காரணமாக அனுமதிக்கப்பட்ட கச்சாய் பகுதியைச் சேர்ந்த செல்வி கு. தாட்சாயினி என்ற ஏழு வயதுச் சிறுமியே மரணத்தைத் தழுவிக் கொண்டவராவார். (86)

## மகாகவியின் கோடை மேடையேறுகிறது

(யாழ்ப்பாணம்)

மகாகவியின் கோடை மேடை நாடகம் எதிர்வரும் ஞாயிறன்று மருதனாமடம் இராமநாதன் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் மேடையேற்றப்படவிருக்கிறது. பட்டப் படிப்புகள் கல்லூரி வெளிவாரி மாணவர் ஒன்றியத்தினால், மேடையேற்றப்படவுள்ள இந்நாடகம் கல்லூரி மாணவர் கந்தையா சிறிகந்தவேள் என்பவரால் நெறியாள்கை செய்யப்பட்டுள்ளது.

## கண்டெடுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ரவீந்திராநிர்மலா (இல 647 11950V) என்பவரது அடையாள அட்டையொன்றும் மூக்குக்கண்ணாடியொன்றும் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம்காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## இராணுவ வாகனம் மோதி இளம் பெண் மரணம்

(வவுனியா)

வவுனியா நகரில் சிறிலங்கா இராணுவத்தின் வாகனம் மோதி இளம்பெண் ஒருவர் பலியானார். இவருடன் கூட வந்த இன்னொரு பெண் படுகாயங்களுக்குள்ளானார்.

கடந்த 22ஆம் திகதி மாலை. தாண்டிக்குளம் பகுதியிலிருந்து பிரதான வீதி வழியாக வவுனியா நகரப் பகுதியை நோக்கி சென்று கொண்டிருந்த இராணுவ வாகனம் மோதியே இப்பரிதாப சம்பவம் இடம் பெற்றது.

வவுனியா நகரில், கூட்டுறவுச் சங்க பிரதான அலுவலகத்தில் பணிபுரிந்து விட்டு வீடு நோக்கி சைக்கிளில் வந்து கொண்டிருந்தவர்களே மோதுண்டவர்களாவார்கள்.

சுப்பிரமணியம் சுமதி (29) என்பவரே பலியானவர். காசிநாதன் என்பவரின் மகளே காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இருவரும் வவுனியா யாழ். வீதியைச் சேர்ந்தவர்கள் மேற்படி இராணுவ வாகனம் லொறி ஒன்றைக் கட்டி இழுத்துச் சென்ற சமயமே இவ்விபத்து இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (தி)

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டதிலுள்ள பட்டதாரிப் பயிலுனருக்கான விசேட பொதுக்கூட்டமொன்று எதிர்வரும் வெள்ளியன்று (28-02-92) காலை ஒன்பது மணியளவில் யாழ் செயலகத்தில் இடம் பெறவுள்ளது. யாழ் மாவட்ட கல்வித் திணைக்களம் தவிர்ந்த ஏனைய திணைக்களங்களைச் சேர்ந்த அனைத்துப் பட்டதாரிப் பயிலுனர்களையும் இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும்படி பட்டதாரிப் பயிலுனர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## சிந்தனைக்கு

குறியை எய்துவது, ஆற்றல். குறியைத் தாண்டி அப்பால் செல்வது ஆட்டுத் துணிச்சல். குறியை எட்டாமல், குறைபட, விழுவதுதுணிவின்மை.

-நிக்கலஸ் கூஸா


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 26-02-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2808
த. பெ. எண். 05


# ஹெல உறுமயவிற்கு சுதந்திரக்கட்சி அங்கீகாரம்

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தனிக்குழுவாக உருவாகியுள்ள ''ஹெல உறுமய''-தேசிய பாரம்பரியம் அணிக்கு எதிராக கடும் போக்கைக் கடைப்பிடிப்பதில்லை என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அமைச்சர் தொண்டமான் தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கு ஓர் தீர்வுத் திட்டத்தை முன்வைத்து அதன் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்த போது அதை எதிர்த்து உருவான சிங்கள பௌத்த பேரினவாத அமைப்புக்களில் 'ஹெல உறுமயவும்' ஒன்று. சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள தீவிர பேரினவாத சக்திகள் ஒன்று சேர்ந்து இந்த அமைப்பை உருவாக்கின.

ஆரம்பத்தில் இந்த அமைப்பு உருப் பெற்ற போது சுதந்திரக்கட்சித் தலைவர்களில் ஒருவரான அனுரா பண்டாரநாயக்கா இதனைக் கண்டனம் செய்தார். பின்னர் சுதந்திரக்கட்சியின் செயற்குழு 'ஹெலஉறுமய' வின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்துவதாகத் தீர்மானமும் எடுத்தது. ஆனால் தற்பொழுது அத்தீர்மானம் கைவிடப்பட்டுள்ளது.

''ஹெல உறுமய'' - தேசிய பாரம்பரியம் - ஆரம்பிக்கப்பட்ட போது அதை அனுராபண்டாரநாயக்கா கண்டனம் செய்தமைக்கு அது ஓர் இனவாத நோக்கில் அமைக்கப்பட்டது என்பதை விட குழம்பிப் போயுள்ள நிலையில் உள்ள சுதந்திரக் கட்சிக்குள் இந்த அமைப்பின்உருவாக்கம் மேலும் குழப்பத்தை ஏற்படுத்தி விடும் என்ற அச்சத்தினாலேயே ஆகும். அம்மா, மகன், மகள் என சுதந்திரக் கட்சிக்குள் தலைமைப்போட்டி நிகழுகையில் தீவிரசிங்கள பௌத்த ஆதரவு அணி ஒன்று உருவாகுமானால், அது மேலும் பல தலைவலிகளை ஏற்படுத்தும் என அனுராபண்டார நாயக்கா எண்ணியதே காரணமாகும்.

ஆனால் 'ஹெலஉறுமய' தமதுகொள்கையை தெளிவாக தற்பொழுது அறிவித்துள்ளது. தமது இலக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும், அமைச்சர் தொண்டமானுக்கும் எதிராகப் போராடுவதே என்றும், இது கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டது என்றும், சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கான தலைமைத்துவப் போட்டியில் இந்த அணி ஈடுபடாது என்றும் தெளிவாக அறிவித்ததைத் தொடர்ந்தே தற்பொழுது 'ஹெல உறுமய'விற்கு சுதந்திரக் கட்சி, செயற்குழு அங்கீகாரம் அளித்துள்ளது.

அதாவது 'ஹெல உறுமய' கட்சி உருவாக்கப்பட்ட போது சுதந்திரக் கட்சித் தலைமை விடுத்த எச்சரிக்கைகளும், அறிவுறுத்தல்களும் சுதந்திரக் கட்சிக்குள் புதியதாக மேலும் ஒருதலைமைத்துவப்போட்டி உருவாகப் போகின்றது என்பதனால் ஏற்பட்ட அச்சத்தினாலேயே ஒழிய, ஹெல உறுமயவின் தீவிர இனவாதப் போக்கால் சுதந்திரக்கட்சி ஓர் இனவாதக் கட்சி என்ற பெயர் உருவாகி விடும் என்பதனாலோ அல்லது அமைச்சர் தொண்டமான் தமது தீர்வுத் திட்டம் தொடர்பாக சுதந்திரக் கட்சித் தலைமையுடன் கலந்துரையாடியதனால் ஏற்பட்ட நிலைமையினாலோ அல்ல.

இந்நிலையானது கடந்த காலத்தைப் போன்றே இன்றும் அரசியல் அதிகாரத்திற்காகவும் கட்சித் தலைமைத்துவத்திற்காகவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைவர்கள் - சிங்களத் தலைவர்கள் இனவாதத்தை எந்த வடிவத்திலும் பயன்படுத்தவும் தயாராகவுள்ளனர் என்பதைவெளிப்படுத்துவதாகவுள்ளது. அதாவது பல வருடங்களாகத் தொடர்ந்து நடந்துவரும் போரும், இழப்புகளும் அவர்களை இன்னும் மாற்றுவதாக இல்லை. ஆகையினால், தமிழர் பிரச்சினைக்கு தமிழீழத்தைத் தவிர வேறு தீர்வு இருப்பதாகவும் இல்லை.

# கடும் வரட்சி கொண்டதாக இவ் வருடம் அமையலாம்

(கொழும்பு)

1992 - இல் இலங்கையின் வானிலை முற்றிலும் மாறாக இருப்பதுடன் பெரும் கஷ்டங்களும் ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. உலகில் எந்த வானிலை ஆராய்ச்சியாளரும் அறிவிக்காத எல் - நினோ என்றழைக்கப்படும் இந்த சீதோஷ்ண நிலை மாற்றத்தை சிறிலங்கா வானிலை ஆராய்ச்சியாளர்கள்முன்கூட்டியே அறிவித்துள்ளார்கள். சீதோஷ்ண நிலையில் பாரிய மாற்றங்கள் ஏற்படப் போவதைத் தீர்மானிக்கப் போதிய ஆதாரங்கள் இருப்பதாக கொழும்பில் வானிலை ஆராய்ச்சியாளர்கள்கருதுகின்றனர்.

கொழும்பு வானிலை அவதான நிலையத்தில் உள்ள காலநிலை அட்டவணைகளின் பிரகாரம் மார்ச் நடுப்பகுதியில் தென்னிலங்கையில் பருவமழை பெய்ய ஆரம்பிக்க வேண்டும். ஆனால் இப்போது கிடைத்துள்ள தரவுகளின் படி இம் முறை பருவமழை வீழ்ச்சி சராசரியை விட மிகக் குறைவாகவே இருக்கும் என்று அனுமானிக்கப்படுகிறது. அண்மைக் காலத்தில் 1986 ஒரு எல் - நினோ ஆண்டாகும்.

இப்போது நிலவும் வரட்சியான கால நிலை குளிர்ந்த இரவுகளும் நாட்டில் பல பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தென்பகுதியில் குளங்கள் வரட்சியடைந்துள்ளன. கொழும்பிலும் புறநகர்ப் பகுதியிலும் தண்ணீர் வெட்டு அமுல் படுத்தப் பட்டுள்ளது.

குருநாகல், மாத்தளை, மொனறாகலை, ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் கடும் வரட்சி நிலவுவதாகவும் ஈரலிப்புப் பிரதேசங்களான நுவரெலியா, வெலிமடை, ஹற்றன் ஆகிய இடங்களில் காய்கறித் தோட்டங்கள் கருகி வருவதாகவும் தொற்று வியாதிகள் பரவி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேபனை வழக்கு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை வழக்கின் விசாரணை முடிவடைந்து தற்போது சட்டத்தரணிகளின் தொகுப்புரை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா சார்பில் ஆஜரான சட்டத்தரணி திலக் மாரப்பன தமது தொகுப்புரையைக் கடந்த பத்துத் தினங்களாக நிகழ்த்தியுள்ளார்.

நீதியரசர் பிரியங்க பெரேரா வெளிநாடு செல்வதால் மீண்டும் அடுத்தமாதம் ஒன்பதாம் திகதி நீதிமன்றம்கூடவுள்ளது. அன்றையதினம் சிறிலங்கா ஜனாதிபதியின் சட்டத்தரணி கே. என். சொக்ஸி தமது தொகுப்புரையை ஆரம்பிக்கவுள்ளார்.

## புதிய வைத்தியர்கள் விரைவில் நியமனம்

(கொழும்பு)

நாடெங்கிலும் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு மார்ச் மாத மத்தியில் முந்நூறு புதிய டாக்டர்களை சுகாதார அமைச்சு நியமிக்கவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள ஐந்து வைத்திய பீடங்களிலும் இருந்து அண்மையில் சித்திபெற்று வெளியேறியவர்கள், பயிற்சி பெறும் வைத்திய அதிகாரிகளாக நியமிக்கப்படுவார்கள் என்றும். இவர்களின் நியமனத்தின் மூலம், நாட்டிலுள்ள ஆஸ்பத்திரிகளில் நிலவும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யலாமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக வைத்திய பீடத்தின் முடிவுகளை வெளியிடுவதிலுள்ள தாமதத்தினாலேயே இந்தப் புதிய நியமனங்கள் தாமதிக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## உடற்கல்விப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோட்ட மட்டத்திலான உடற்கல்விப் போட்டி நேற்று யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக திரு. அருணகிரிராஜா கலந்து கொண்டார் (க)

## சர்வதேச செஞ்சிலுவை தீவுப்பகுதி செல்லும்

அடுத்த மாதம் நடுப்பகுதியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் குழு ஒன்று தீவகத்திற்குச் செல்ல இருக்கிறது.

தீவுப்பகுதி மக்களின் நிலைமைகளை அவதானிக்கவும், இங்கிருந்து தீவகம் செல்ல விரும்புவர்களை அழைத்துச் செல்லுதல், அங்குள்ளவர்களின் உறவினர்களது கடிதங்களை எடுத்துச்செல்லல் மற்றும் அங்கிருந்து யாழ்ப்பாணம் வர விரும்புவோரை அழைத்து வருதல் ஆகியவற்றை மேற்கொள்வதற்காகவே இவ் அதிகாரிகள் குழு தீவகத்திற்குச் செல்ல இருக்கிறது. (க) (75)

# தமிழ் அகதிகள் விவகாரம் ஐ.நா. உன்னிப்பாக கவனிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய, இலங்கை அரசுகள் தமிழ் அகதிகள் விடயத்தைக் கையாளும் முறை குறித்தும், அகதியாக உள்ள ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் இந்தஅரசாங்கங்களினால் நடாத்தப்படும் விதம் குறித்தும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தின் ஜெனிவா தலைமை அலுவலகம் மிக உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. மேற்படி விடயங்கள் தொடர்பாக அவ்வப்போது பல்வேறு தரப்பில் இருந்தும் பூரண விபரங்களையும், அறிக்கைகளையும் இந்த அலுவலகம் பெற்றுக்கொண்டு வருகிறது.

இந்தியாவில் தங்கியிருக்கும் சுமார் ஒரு லட்சத்திற்கும்மேற்பட்ட தமிழ் அகதிகளை இலங்கைக்கு அழைத்து வருவதற்காக சிறிலங்கா மற்றும் இந்திய அதிகாரிகள் பல சந்தர்ப்பங்களில் பொய் கூறியுள்ளதுடன், இந்த அகதி மக்களை ஏமாற்றியுள்ளனர். இவ்விடயங்கள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய தலைமை அலுவலகம் தற்பொழுது பெற்றுக் கொண்ட அறிக்கைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

நாடு திரும்புவதற்கு இலவச போக்குவரத்து வசதி, நாடு திரும்பியவுடன் மூன்று மாதங்களுக்குத் தற்காலிக இருப்பிட வசதியுடன், வாராந்த இலவச உலர் உணவு, மானியமாக 6000 ரூபா வழங்கப்படும். அனைத்து அகதிகளையும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் பொறுப்பேற்கும். தொழில் முயற்சிக்குப் பயிற்சி, தொழில்தொடங்குவதற்கு கடன்வசதி, சொந்தமாக வீடு கட்டுவதற்கு கடன் ஆகியவைவழங்கப்படும் என்று இரு நாட்டு அரச அதிகாரிகளும் பொய் கூறியுள்ளதுடன் இம்மக்களை ஏமாற்றியுள்ளனர். நாடு திரும்பும்படி இவர்கள் பலமாக வற்புறுத்தப்பட்டிருக்கின்றனர்.

### அரசின் மறைமுக கோரிக்கை

இவ்வாறு பகீரதப்பிரயத்தனம் செய்து அழைத்துவரப்பட்ட முதல் தொகுதி அகதிகளுக்கு ஒரு நாள் மட்டும் உணவு வசதி செய்து கொடுக்கப்பட்டது. தொடர்ந்து இவ் அகதிகளை பராமரிக்க முடியாத நிலையில் இவர்களை வீடுகளுக்குச் செல்லும்படி வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அதேவேளை சிறிலங்கா அரச அதிகாரிகள் சிலர் இவ் அகதிகளைப் பொறுப்பேற்றுக் கொள்ளும்படி கோரி அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர் ஸ்தானிகர் ஆலயத்தின் தலைமை அலுவலக அதிகாரிகளிடம் மறைமுகமாக கோரியிருப்பதாக இறுதியாகக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

### மனிதாபிமான உதவிக்குத்தயார்

அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகர் ஆலய தலைமை அலுவலக அதிகாரிகளைப் பொறுத்தவரையில் இவ்வாறு அரச அதிகாரிகள் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் மனிதாபிமான அடிப்படையில் உணவு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு தயாராக உள்ளனர். ஆனால் தமது வழமையான அகதிகளுக்கான விதிமுறைகளுக்கு ஏற்ப அகதிகளை ஏற்றுக் கொள்வதற்கு இந்த ஸ்தாபனம் தயாராக இல்லை. மேற்படி விதிமுறைகளுக்கு ஏற்ப அகதிகளை ஏற்றுக்கொள்வதற்கு இந்தஸ்தாபனத்திற்கு இந்திய இலங்கை அரசுகள் முன்னர் அனுமதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# இந்தியாவின் கோரிக்கையை இஸ்ரேல் பரிசீலிக்கும்

(சென்னை)

இந்தியாவில் நிலவும் 'பயங்கரவாதத்தை' ஒடுக்குவதற்கு ஒத்துழைப்பு அளிப்பது பற்றிய எந்த ஒரு சிபார்சையும் இஸ்ரேல் பரிசீலிக்கும் என டில்லியிலுள்ள இஸ்ரேல் தூதரக பொறுப்பதிகாரி ஹேரே வெட்ஜர் தெரிவித்துள்ளார்.

முன்னர் இந்தியாவில் நிலவும் 'பயங்கரவாதத்தை' ஒழித்துக் கட்ட இஸ்ரேலின் நிபுணத்துவ உதவியைப் பெற இந்தியா ஆர்வமாக இருப்பதாக இந்திய பாதுகாப்புஅமைச்சர் சரத்பவார் இஸ்ரேலிய அரசுக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

இதனை இஸ்ரேலிய அரசு பரிசீலித்து வருவதாகவும் தூதரகப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை இஸ்ரேலிய தூதரகத்தை இந்தியாவில் திறப்பதற்காக வெட்ஜர் பம்பாய் சென்றுள்ளார். இந்தியாவுடன் உயர் தொழில் நுட்பங்களை பகிர்ந்து கொள்ளவும் இஸ்ரேலிய நாட்டு நிறுவனங்கள் ஆர்வமாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆசிய நாடுகளில் இஸ்ரேல் காலடி எடுத்து வைசக இந்தியா ஒரு நுழைவாயிலாக இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சிதைந்த நிலையில் சிசுவின் சடலம்

(குருநகர்)

கொழும்புத்துறை - வசந்தபுரத்தில்எருக்கலைப் பற்றைக்குள் இருந்து சிசு ஒன்றின் சிதைந்த சடலம் நேற்றுக் காலை (25-5-92 )மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சாரம் ஒன்றில் சுற்றப்பட்டிருந்தபடி காணப்பட்ட சடலத்தில் இடுப்புக்குக் கீழும், கைகள் இரண்டின் மேற்பகுதியும் இருக்கவில்லை.

இதனால் சிசுவின் சடலம் ஆணினதோ பெண்ணினதோ என்பதும் உறுதிப்படுத்த முடியவில்லை என்பதைக் காவல் துறையினர் தெரிவித்தனர்.

மேற்படி விசாரணைகளை கொழும்புத்துறை கிராம சேவையாளர் நடத்த உத்தரவிட்டுள்ளதாகவும் சடலம் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (21)

## இந்திய வரவுசெலவுத் திட்டம்

## உலக வங்கிக்குத் தெரிவிப்பு; லோக் சபாவில் குழப்பம்

(டில்லி)

1992,93 ஆம் ஆண்டுக்கான இந்திய பொது வரவு-செலவுத் திட்டம் குறித்த விபரங்கள் உலக வங்கிக்குக் கிடைத்திருக்கின்றன என்ற செய்திகளை அடுத்து நேற்றுப் பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் கொந்தளிப்பு ஏற்பட்டது.

ராஜ்ய சபாவில் நிதி அமைச்சருக்கு எதிராக இடதுசாரிக் கட்சிகளும், தேசிய முன்னணியும் உரிமை மீறல் அறிவித்தல் கொடுத்திருக்கின்றன. ராஜ்ய சபாவில் 40 நிமிடங்கள் சபை அலுவல்கள் தடைப்பட்டன.

லோக்சபா நடவடிக்கைகளும் பல தடவைகள் ஒத்திப் போடப்பட்டன. பாராளுமன்றத்தில் பொது வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாகவே அதன் விபரங்கள் உலக வங்கிக்குத் தெரியவந்திருக்கின்றன என்று எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டியுள்ளன. நாட்டின் பொருளாதார சுதந்திர உரிமையை அரசு விட்டுக்கொடுத்துவிட்டது என்றும்எதிர்க்கட்சியினர் கூறினார்கள்.

நிதி அமைச்சருக்கும் உலக வங்கிக்கும் இடையிலான கடிதத் தொடர்பு விபரங்களைச் சபையில்தாக்கல்செய்யுமாறும் கேட்டனர்.

வரவு-செலவுத் திட்டத்தின் இரகசியத் தன்மை பாதுகாக்கப்படுகிறது என்றும், அதைத் தாக்கல் செய்த பிறகு உலக வங்கியுடனான தனது கடிதத் தொடர்பு விபரங்களைப் பாராளுமன்றத்தின் நூலகத்தில் தான் சமர்ப்பிக்கத் தயாரென்றும் நிதி அமைச்சர் கலாநிதி மன்மோகன் சிங்தெரிவித்தார்.

தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

### இறுதிப்பரீட்சைகள்

1989, 1990, 1991 ஆம் கல்வியாண்டு பரீட்சைகளுக்கு விண்ணப்பித்த

### மாணவர்களின் கவனத்திற்கு

1991 ஆம் கல்வியாண்டிற்கான மேற்படி பரீட்சை இலங்கையில் எந்தத் தொழில்நுட்பக் கல்லூரியிலும் இதுவரை நடைபெறவில்லை,

மேலும் மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான பரீட்சை 1991 ஆம் ஆண்டுக்கான பரீட்சை நடைபெறும்போது நடைபெறும் என பரீட்சை ஆணையாளர் 1992-02-10 ஆம் திகதி எனக்கு உறுதியளித்துள்ளார் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தொழில்நுட்பக் கல்லூரி, அதிபர்.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
1992-02-25

(சி/3961)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## யாழ். பல்கலையில் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

''தமிழீழ விடுதலைப் போராட்டமும், சர்வதேச நிலைப்பாடும்'' என்னும் தலைப்பிலான கருத்தரங்கொன்று இன்று யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. பிற்பகல் மூன்றுமணியளவில் இக் கருத்தரங்குஇடம்பெறும் யாழ். பல்கலைக் கழக சமூக விஞ்ஞான மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக் கருத்தரங்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின்அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் உரைநிகழ்த்தவுள்ளார்.

## தமிழ்இளைஞர்கள்

பதாகக் கூறப்படுகிறது. இதற்காகவும் விடுதலைப் புலிகள் குண்டுத் தாக்குதல்களை கொழும்பு நகரில் நடாத்தலாம் என்று பாதுகாப்புப் படையினர் சந்தேகிப்பதாலுமே இவ்வாறான கண்காணிப்புக்களும், கைதுகளும் நடைபெற்று வருவதாக கூறப்படுகிறது. இதனால் தமிழ் இளைஞர்கள் நகரப்பகுதிகளில் நடமாடுவதைத் தவிர்த்து வீடுகளில் தங்கியிருப்பதாகவும் கூறப்படுகிறது. (க)

## பூவரசங்குளத்தில்

ஈச்சங்குளம் பகுதியில் நேற்றுமாலை 2.30 மணியளவில் உலங்கு வானூர்திகள் றொக்கட் தாக்குதல்களை மேற்கொண்டன.

இதேவேளை வுனியாவில் நேற்று சிறிலங்கா இராணுவத்தினர் பாரியநடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக 'லங்காபுவத்' அறிவித்துள்ளது. விமானம்,டாங்கிபடைகளின் உதவியுடன் நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் அது தெரிவித்தது.

கூட்டு நடவடிக்கைகள் தளபதி ஹமில்டன்வனசிங்கா வவுனியா மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தின்கட்டுப்பாட்டுப் பகுதியை விஸ்தரிக்க 'வன்னி விக்கிரம' நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதென 'லங்காபுவத்' திற்கு தெரிவீத்துள்ளார்.

இராணுவ நடவடிக்கைகளுக்கு முன்னோடியாக விமானங்கள், உலங்கு வானூர்திகள் புலிகளின் நிலைகள்மீது தாக்குதல்களை மேற்கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

## தடுத்து

ணிகள் சென்று சந்தித்துள்ளனர். இதன்அடிப்படையிலான தகவல்களின்படி பொலிஸ் நிலையங்கள், இராணுவ முகாம்கள், பொலிஸ்தலைமையகத்தின் ஆறாம்மாடி உட்பட பல இடங்களிலும் பல இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தெரியவந்திருப்பதாகவும் மனித உரிமைகள் சட்டத்தரணிகள் குறிப்பிட்டுள்ளனர்.

## புதிய வங்கிக் கிளைகள் திறக்க வேண்டாம் -மேலிடம் பணிப்பு

(கொழும்பு)

புதிய வங்கிக் கிளைகளைத் திறக்க வேண்டாமென்று மத்திய வங்கி, மக்கள் வங்கியையும் இலங்கை வங்கியையும் பணித்துள்ளது.

வர்த்தக நியமங்களுக்குப் பயன்படாத கிளைகளை வங்கிகள் திறப்பதை நிறுத்த வேண்டும் என்று கடந்த புதனன்று பிரதம மந்திரி பாராளுமன்றத்தில் அறிவித்ததைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சில கடன்களுக்கு வழங்கப் பணம் ஒதுக்குவதையும் மத்திய வங்கி நிறுத்தியுள்ளது. இலங்கையிலுள்ள அனைத்து வங்கிகளுக்கும் இந்த நடைமுறை பொருந்தும்.

இதேவேளை, மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி ஆகிய இரு அரச வங்கிகளும் சிறிய மற்றும் நடுத்தர முதலீடுகளுக்கு (எஸ். எம். ஐ - 4) நிதி வழங்கும் திட்டத்தின் நான்காவது கட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுதல் இந்த வங்கிகள் இரண்டும் புனரமைக்கப்பட்ட பிறகே முடிவெடுக்கப்படும்.

இந்த இரு அரச வங்கிகளும் மேற்படி திட்டத்தில் முன்னைய மூன்று கட்டங்களிலும் நிதி வழங்குவதில் முக்கிய பங்கு வகித்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## துறைமுகம்

பலர் கலந்துகொள்வர். இன்றைய சந்திப்பின் போது அத்தியாவசியப் பொருள்களைக் களஞ்சியப்படுத்துதல், வாகனப்போக்குவரத்து, துறைமுகத் தொழிலாளர்களின் சேவை ஆகிய விடயங்கள் தொடர்பாக முடிவுகள் எடுப்பது பற்றி ஆலோசிக்கப்படும்.

இத்துறைமுகத்தின் ஊடாக அத்தியாவசியப்பொருள்களை கையாளுவதற்கு சிறிலங்கா அரசு ஏற்கனவே இணக்கம் தெரிவித்திருந்ததைத் தொடர்ந்துமேற்படிபேச்சுக்கள்நடைபெறஉள்ளது. மிகவிரைவில் மேற்படி துறைமுகம் திறக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரி ஒருவர் நேற்று மாலை தெரிவித்தார்.

## விளக்கில்லாத

னால் காவல் துறையினால் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

சாவகச்சேரி - யாழ்ப்பாண வீதியில் அதிகபாரங்களுடன் துவிச்சக்கரவண்டிகள் ஓட்டப்படுவதால் அவ்வீதியில்விபத்துகள் அதிகமாகஏற்படுகின்றன. இதனைத் தவிர்க்க துவிச்சக்கர வண்டிகளில் அதிகபாரங்களுடன் பயணம் செய்ய வேண்டாம் என அவர் தெரிவித்தார்.

## சமுகம் தரவும்

யாழ் - பல்கலைக்கழக, மறுமலர்ச்சிக்கழகத்தினால் நடாத்தப்பட்டுவரும் பெண்களுக்கான சுயவேலை வாய்ப்புத்திட்டத்திற்கான பயிற்சிநெறியில் பங்குபற்றிய அனைத்து மாணவர்களும் நாளை வியாழக்கிழமை பி.பகல் 3.00 மணிக்கு, மறுமலர்சிக்கழகத்திற்குதவறாது சமுகம் அளிக்கும்படி வேண்டிக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

## வீரச்சாவு

விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித்தாக்குதலில் லெப்டினன்ட் காந்த் (வே. உதயகுமார் - வீரபத்திரர்கோவிலடி ஏறாவூர்) வீரச்சாவை தழுவிக் கொண்டார். 22.2.92 அன்று வீமன்காமம் பகுதியில் இராணுவத்தினருடன் நடைபெற்ற நேரடி மோதலில் விழுப்புண் அடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த எம்மவரான லெப். சுரேஸ் (சின்னத்துரை தயாபரன் - மண்டைதீவு) நேற்றுவீரச்சாவடைந்தார். இவ்விரு வேங்கைகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## தமிழ்நேசன்

பட்டிருந்தார்.

இதனை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் சிவநாயகம் தாக்கல் செய்திருந்த மனுவை நீதிமன்றம் நிராகரித்து அவரை தொடர்ந்து காவலில் வைக்க உத்தரவிட்டுள்ளது.

'தமிழ்நேசன்' பத்திரிகை தொடர்ந்தும் லண்டனிலிருந்து வெளிவருவது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி லியோ கழகமும் சுன்னாகம் லயன்ஸ் கழகமும் இணைந்து நடாத்தும்
யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு
இடையிலான

### பொது அறிவுப் போட்டி

1. இப்போட்டியில் ஒரு பாடசாலையிலிருந்து 5 மாணவர் மட்டும் பங்குபற்றலாம்.
2. இறுதிப் போட்டிக்கு எழுத்துப் பரீட்சை மூலம் 10 பேர் தெரிவு செய்யப்படுவர். இவர்களில் இருந்து முதல் 5 இடங்களுக்கும் நேர்முக வினா - விடைப் போட்டி மூலம் தெரிவு செய்யப்படும்.
3. ஒரு மாணவரின் விண்ணப்பக் கட்டணம் ரூபா 10.00 ஆகும்.
4. 10-03-1992 அன்று பி. ப. 3.00 மணிக்கு முன் விண்ணப்பங்கள் லியோ கழக செயலரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.
5. போட்டி 16-03-1992 அன்று நடைபெறும். இடம் பின்பு அறிவிக்கப்படும்.
6. வெகுமதிமிக்க பரிசில்கள் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரால் வழங்கப்படும்.

லியோ கழகம்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

[சி/3963]